05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகளும் ஓர் ஆய்வு

# KAJIAN SARIYAI THONDU NAYANMAAR DALAM TEKS PERIYA PURANAM DAN SARIYAI THONDU BADAN BUKAN KERAJAAN MASYARAKAT INDIA PORT DICKSON

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மகேஸ்வரி த/பெ தேவராஜூ

MAGESWARI A/P DEVERRAJU

சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2020

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகளும் ஓர் ஆய்வு

# KAJIAN SARIYAI THONDU NAYANMAAR DALAM TEKS PERIYA PURANAM DAN SARIYAI THONDU BADAN BUKAN KERAJAAN MASYARAKAT INDIA PORT DICKSON

மகேஸ்வரி த/பெ தேவராஜூ

MAGESWARI A/P DEVERRAJU

தமிழ் இலக்கிய முதுகலை பட்டத்திற்கான ஆய்வேடு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

DISERTASI DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT UNTUK MEMPEROLEH IJAZAH SARJANA SASTERA (MOD PENYELIDIKAN)

மொழி மற்றும் தொடர்புதுறை புலம்
சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்

FAKULTI BAHASA DAN KOMUNIKASI
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2020

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UPSI/IPS-3/B 32
Pind:00 m/s:1/1

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

**Sila tanda (✓)**

| | |
|---|---|
| Kertas Projek | |
| Sarjana Penyelidikan | ✓ |
| Sarjana Penyelidikan dan Kerja Kursus | |
| Doktor Falsafah | |

## ISTITUT PENGAJIAN SISWAZAH

## PERAKUAN KEASLIAN PENULISAN

Perakuan ini telah dibuat pada 11 Februari 2020

**i. Perakuan pelajar:**

Saya, **MAGESWARI A/P DEVERRAJU (M20171000903)** dari **FAKULTI BAHASA DAN KOMUNIKASI** dengan ini mengaku bahawa disertasi yang bertajuk **KAJIAN SARIYAI THONDU NAYANMAAR DALAM TEKS PERIYA PURANAM DAN SARIYAI THONDU BADAN BUKAN KERAJAAN MASYARAKAT INDIA PORT DICKSON** adalah hasil kerja saya sendiri. Saya tidak memplagiat dan apa-apa penggunaan mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dilakukan secara urusan yang wajar dan bagi maksud yang dibenarkan dan apa-apa petikan, ekstrak, rujukan atau pengeluaran semula daripada atau kepada mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dinyatakan dengan sejelasnya dan secukupnya.

_______________________

Tandatangan pelajar

**ii. Perakuan Penyelia**

**Saya DR. KARTHEGES A/L PONNIAH** dengan ini mengesahkan bahawa hasil kerja pelajar yang bertajuk **KAJIAN SARIYAI THONDU NAYANMAAR DALAM TEKS PERIYA PURANAM DAN SARIYAI THONDU BADAN BUKAN KERAJAAN MASYARAKAT INDIA PORT DICKSON** dihasilkan oleh pelajar seperti nama di atas dan telah diserahkan kepada Institut Pengajian Siswazah bagi memenuhi sebahagian/ sepenuhnya syarat untuk memperoleh Ijazah Sarjana Sastera.

_______________ _______________________

Tarikh Tandatangan Penyelia

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

UPSI/IPS-3/BO 31
Pind:00 m/s 1/1

# ISTITUT PENGAJIAN SISWAZAH / *INSTITUTE OF GRADUATE STUDIES*

**BORANG PENGESAHAN PENYERAHAN TESIS/DISRTASI/LAPORAN KERTAS PROJEK**
***DECLARATION OF THESIS/DISERTATION/PROJECT PAPER FORM***

**TAJUK / *TITLE:*** KAJIAN SARIYAI THONDU NAYANMAAR DALAM TEKS PERIYA PURANAM DAN SARIYAI THONDU BADAN BUKAN KERAJAAN MASYARAKAT INDIA PORT DICKSON

**No.Matrik / *Matric's No.:*** M20171000903

**Saya / *I:*** MAGESWARI A/P DEVERRAJU
(Nama pelajar / *Student's Name*)

**Mengaku membenarkan Tesis/Disrtasi/Laporan Kertas Projek (Doktor Falsafah/Sarjana)* ini disimpan di Universiti Pendidikan Sultan Idris (Perpustakaan Tuanku Bainun) dengan syarat-syarat kegunaan seperti berikut:-**
***acknowledged that Universiti Pendidikan Sultan Idris (Tuanku Bainun Library) reserves the right as follows:-***

1. **Tesis/Disrtasi/Laporan Kertas Projek ini adalah hak milik UPSI.**
   ***The thesis is the property of Universiti Pendidikan Sultan Idris.***

2. **Perpustakaan Tuanku Bainun dibenarkan membuat salinan untuk tujuan rujukan sahaja.**
   ***Tuanku Bainun Library has the right to make copies for the purpose of research only.***

3. **Perpustakaan dibenarkan membuat salinan Tesis/Disertasi ini sebagai bahan pertukaran antara Institusi Pengajian Tinggi**
   ***The Library has the right to make copies of the thesis for academic exchange.***

4. **Perpustakaan tidak dibenarkan membuat penjualan salinan Tesis/Disertasi ini bagi kategori TIDAK TERHAD.**
   ***The Library are not allowed to make any profit for 'Open Access' Thesis/Disertation.***

5. **Sila tandakan (√) bagi pilihan kategori di bawah / *Please tick (√) for category below:-***

- [ ] **SULIT / CONFIDENTIAL** — Mengandungi maklumat yang berdarjah keselamatan atau kepentingan Malaysia seperti yang termaktub dalam Akta Rahsia Rasmi 1972 / *Contains confidental information under the Official Secret Act 1972*
- [ ] **TERHAD / RESTRICTED** — Mengandungi maklumat terhad yang telah ditentukan oleh Organisasi/badan di mana penyelidikan ini dijalankan / *contains restricted information as specified by the organization where research was done.*
- [x] **TIDAK TERHAD / OPEN ACCESS**

_______________________
**(Tandatangan Pelajar / *Signature*)**

**Tarikh:**

_______________________
**(Tandatangan Penyelia / *Signature of Supervisor*)**
**& Nama & Cop Rasmi / *Name & Official Cop*)**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## நன்றியுரை

இந்த ஆய்வு முழுமை பெறுவதற்கு எல்லாம் வல்ல ஈசனின் திருவருளே காரணமாக அமைந்தது. ‘அவனன்றி ஓர் அணுவும்’ அசையாது என்பதுபோல் சிவனருளன்றி இவ்வாய்வினைச் செய்து முடித்திருக்க இயலாது. எனவே, வேதநெறி தழைக்க, சைவத்துறை விளங்க, செம்மொழியாம் தமிழ்மொழி செழித்து ஓங்க சிவபரம்பொருளின் தாளினை முதலில் போற்றி வணங்குகின்றேன். ‘பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகளும் ஓர் ஆய்வு’ எனும் தலைப்பில் அமைந்த இவ்வாய்விற்கு உரிய கருத்துகளையும் ஆலோசனைகளையும் வழங்கி நெறிமுறைப்படுத்தியும் என்னை ஊக்கப்படுத்தியும் உதவிய ஆய்வு நெறியாளர் முனைவர் கார்த்திகேஸ் பொன்னையா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன். அவரது வழிகாட்டலும், ஊக்கமும் தன்னம்பிக்கையுணர்வுமே இந்த ஆய்வு வெற்றிகரமாக அமைய அடித்தளமாக அமைந்தது. தொடர்ந்து எல்லா வகையிலும் ஒத்துழைப்பு நல்கிய சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பிரிவு பேராசிரியப் பெருமக்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியைக் கூறிக் கொள்கிறேன். இவர்களைத் தொடர்ந்து எனது ஆய்வுக்கு உதவியாக இருந்த சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழக விளையாட்டு அறிவியல் புலத்தின் இணைப்பேராசிரியர் முனைவர் குணதேவன் த/பெ ஏழுமலை அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தவிர, அன்பும் ஆசியும் வழங்கிய எனது பெற்றோர் அமரர் திரு.தேவராஜூ த/பெ லக்ஷ்மணன் அவர்களுக்கும் எனது தாயார் திருமதி. கமலா அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைப் பகிர்ந்து கொள்கிறேன். மேலும், இவ்வாய்வை மேற்கொள்ள ஆதரவு அளித்துத் துணையாய் நின்ற எனது சகோதரர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# ஆய்வுச் சாரம்

பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சரியை தொண்டுகளையும் மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை, போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம், போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் ஆகிய மூன்று அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகளையும் ஆய்வு செய்யும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது பண்புசார் ஆய்வாக அமையப் பெற்றுள்ளதால் நூலக ஆய்வில் நூல்நெறிமுறையின் மூலம் பெரிய புராணச் செய்யுள்களுக்கு விளக்கங்கள் பெறப்பட்டதோடு 63 நாயன்மார்களின் சரியை தொண்டுகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும், நேர்க்காணல் வழியாக மேற்குறிப்பிடப்பட்ட போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்கள் மூன்றின் தோற்றம், வளர்ச்சி, நடவடிக்கைகள், செயல்பாடுகள், திட்டங்கள் ஆகியனவும் கண்டறியப்பட்டன. இதன்மூலமே கிடைக்கப்பெற்ற தரவுகள் பகுப்பாய்வுக்குப்பின் ஒருங்கிணைக்கப்பட்டு ஆய்வு முடிவும் பெறப்பட்டுள்ளது. இவ்வாய்வு முடிவானது பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சரியை தொண்டுகளையும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகளையும் ஒத்திருப்பதோடு சில வேற்றுமைகளையும் காட்டுவதாக அமைந்துள்ளது. நாயன்மார்களில் 47 பேர் சரியை மார்க்கத்தில் கோயில் திருப்பணிகளையும் இறையடியார்களுக்குத் தொண்டுகள் செய்வதையும் தங்களின் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவாகிறது. இவ்வாய்வின்வழி ‘மக்கள் தொண்டே மகேசன் தொண்டு’ எனும் கூற்றை முன்நிறுத்தி நாயன்மார்கள் செயல்பட்டதை அமுது படைத்தல், பொருளுதவி செய்தல், உடல் உழைப்பால் தொண்டுகள் புரிதல், ஆலயத் திருப்பணிகள் செய்தல் போன்ற சரியை தொண்டுகள் சுட்டி நிற்கின்றன. இவர்களைப் பின்னொற்றியே உணவு, உடை, கல்வி, இருப்பிடம், நன்னெறிப் பயிற்சிகள் என மக்களின் தேவையறிந்து செயலாற்றுவதை மேற்குறிப்பிடப்பட்ட போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களும் கடமையாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன என்பதை இந்த ஆய்வு காட்டுகின்றது. இவை யாவும் பெரிய புராணத்தில் நாயன்மார்களின் தொண்டுகளை ஒத்திருப்பதைக் காணும் அதே வேளையில், வேலை வாய்ப்புகளையும் தொழில்திறன் பயிற்சிகளையும் வழங்கி மக்கள் சுயகாலில் இயங்கவும் இவ்வியக்கங்கள் உதவுவதையும் இந்த ஆய்வு எடுத்துரைகின்றது. எனவே, பெரிய புராணத்தில் நாயன்மார்கள் காட்டிய வழியில் எவ்வித எதிர்பார்ப்புமின்றி தொண்டுகளாற்றுவது இறைவனுக்கே செய்யும் உண்மை தொண்டுக்கான மனநிறைவை அளிக்கும்; தன்னலமற்ற சேவைகள் மேலோங்கும்; இகத்திலும் பரத்திலும் நிலையான வாழ்வளிக்கும் என்பதையும் இவ்வாய்வு உணர்த்துகின்றது. தவிர, நமது சமயம் உணர்த்தும் உயரிய பண்பாடாகிய தொண்டு நெறியும் வருங்காலத் தலைமுறையினருக்கு வழிகாட்டலாக அமையவும் இவ்வாய்வு துணைபுரியும். இதனால், தன்னலம் மறைந்து பொதுநலம் பேணும் உன்னத சமுதாயம் மலரும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**KAJIAN SARIYAI THONDU NAYANMAAR DALAM TEKS PERIYA PURANAM DAN SARIYAI THONDU BADAN BUKAN KERAJAAN MASYARAKAT INDIA PORT DICKSON**

## ABSTRAK

Kajian ini bertujuan mengkaji *sariyai thondu Nayanmaar* dalam teks *Periya Puranam* dan badan bukan kerajaan masyarakat India di Port Dickson. Kajian ini berbentuk penyelidikan kualitatif yang berfokus kepada kaedah perpustakaan yang bersifat interpretasi kesusasteraan. Memandangkan teks *Periya Puranam* iaitu sumber rujukan utama kajian ini adalah satu-satunya karya Kesusasteraan Pertengahan yang menekankan *sariyai thondu*, maka pemahaman dan tafsiran puisi-puisi klasik dilaksanakan melalui pendekatan *hermenutik.* Pendekatan ini juga membantu mengenal pasti *sariyai thondu* yang diamalkan oleh *Nayanmaar* dalam teks *Periya Puranam.* Selain itu, instrumen kajian berbentuk temu bual digunakan dalam memperoleh data daripada pengerusi dan setiausaha tiga badan bukan kerajaan masyarakat India yang memberi sumbangan berbentuk kebendaan dan fizikal kepada kaum India di sekitar kawasan Port Dickson iaitu Persatuan Hindu Sangam Port Dickson, Pertubuhan Pembangunan Sosial Port Dickson dan Pertubuhan Keluarga Bahagia Berinovatif Port Dickson. Analisis teks *Periya Puranam* menyatakan seramai 47 orang *Nayanmaar* berpegang teguh dalam prinsip dan pegangan hidup dalam melakukan *sariyai thondu* seperti menyedekah makanan dan mendermakan barang-barang kepada para pengikut Tuhan, membuat amalan kebajikan di kuil serta memberi khidmat fizikal kepada para pengikut Tuhan. Justeru, hasil temu bual mendapati bahawa badan bukan kerajaan masyarakat India Port Dickson yang tersebut di atas juga mengikut jejak langkah *Nayanmaar* dalam memberikan khidmat seperti menghulurkan bantuan makanan, barang-barang keperluan, menyediakan kemudahan pendidikan dan tempat tinggal kepada masyarakat setempat. Namun, terdapat juga perbezaan dari segi *sariyai thondu* yang dilakukan oleh *Nayanmaar* dalam teks *Periya Puranam* yang mana ketiga-tiga badan bukan kerajaan ini juga memberikan latihan kemahiran perindustrian dan menyediakan peluang pekerjaan dalam sektor perindustrian dan perkilangan. Kesimpulannya, Analisis teks dan hasil temu bual kajian ini menunjukkan *sariyai thondu* yang dilakukan oleh *Nayanmaar* dalam teks *Periya Puranam* dan tiga badan bukan kerajaan masyarakat India Port Dickson membantu memenuhi keperluan para pengikut Tuhan dan penduduk setempat. Implikasi kajian ini dapat menyedarkan kepentingan dan meningkatkan *sariyai thondu* badan bukan kerajaan masyarakat India demi menjamin masa depan anak bangsa.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**STUDY ON SARIYAI THONDU NAYANMAAR IN THE TEXT OF PERIYA PURANAM AND SARIYAI THONDU OF PORT DICKSON INDIAN NON-GOVERNMENTAL ORGANIZATION**

## ABSTACT

The purpose of this study is to examine and explain the practices of *sariyai thondu* by *Nayanmaar* in the text of *Periya Puranam* (the Great Myth) and by the non-govermental organization communities of Indians in Port Dickson. This study was conducted based on qualitative research focusing on literary interpretation of literature. As the text of *Periya Puranam* became the main source of reference of this study, the understanding and interpretation of classical poems was carried out through *hermeneutic* approach. This approach also helped to identify the practices of *sariyai thondu* by *Nayanmaar* in the text of *Periya Puranam*. In addition, interviews were also used as an instrument to study the development and implementation of the *sariyai thondu* which practiced by the three Indian non-govermental organizations around Port Dickson; the Hindu Association of Port Dickson, the Port Dickson Social Development Organization and the Innovative Happy Family Organization Port Dickson. The findings suggest that there are some similarities and differences between the *Nayanmaar* in the texts of *Periya Puranam* and the Indian non-govermental organizations in Port Dickson. According to the texts of *Periya Puranam,* a total of 47 *Nayanmaar* held the principles of doing services to devotees, by providing food, by donating goods, practicing charity works in the temple and also by providing other helpful physical services. Hence, it was found that the non-govermental organizations also follow *Nayanmaar's* footsteps in providing services such as providing food aid, essential goods, providing educational facilities and shelter to the local community. These three non-govermental organizations also provided training to enhance the skills and provided job opportunities to the locals in order to ensure and develop for a better future. In conclusion, this study shows and concludes that services which were directed to the community without expecting anything in return brings satisfaction and also brings one closer to the God. This study implicates the importance of producing people or devotees with humanity

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| **மாணவர் உறுதி ஆவணம்** | | ii |
| **நன்றியுரை** | | iv |
| **ஆய்வுச் சாரம் (தமிழ்மொழி)** | | v |
| **ஆய்வுச் சாரம் (தேசியமொழி)** | | vi |
| **ஆய்வுச் சாரம் (ஆங்கிலம்)** | | vii |
| **உள்ளடக்கம்** | | viii |
| **அட்டவணை பட்டியல்** | | xv |
| **படவரைவு பட்டியல்** | | xvii |
| **எழுத்துச் சுருக்கக் குறியீட்டு விளக்கம்** | | xvii |
| **இயல் 1** | **முன்னுரை** | |
| 1.1 | அறிமுகம் | 1 |
| 1.2 | ஆய்வுப் பின்னணி | 2 |
| 1.3 | ஆய்வுச் சிக்கல் | 8 |
| 1.4 | ஆய்வு நோக்கம் | 11 |
| 1.5 | ஆய்வு வினா | 12 |
| 1.6 | ஆய்வுக் கருத்துக் கட்டமைப்பு | 13 |
| 1.7 | ஆய்வின் முக்கியத்துவம் | 14 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



1.8 ஆய்வு எல்லை 16

1.9 கருச்சொல் விளக்கம் 18

1.9.1 பெரிய புராணம் 18

1.9.2 நாயன்மார்கள் 20

1.9.3 அடியார்கள் 21

1.9.4 சித்தாந்தம் 22

1.9.5 பதி 23

1.9.6 பசு 23

1.9.7 பாசம் 24

1.9.8 சரியை 25

1.9.9 தொண்டு 27

1.9.10 அரசு சாரா இயக்கம் 27

1.9.11 அரசு சாரா இந்தியர் இயக்கம் 28

1.10 தொகுப்புரை 30

**இயல் 2 இலக்கிய மீள்நோக்கு**

2.1 முன்னுரை 31

2.2 பெரிய புராணம் - அறிமுகம் 32

2.3 பெரிய புராணம் (பெயரும் - பொருளும்) 33

2.4 பெரிய புராண நூலாசிரியர் 35

2.4.1 சேக்கிழாரின் காலம் 36

2.5 பெரிய புராணம் தோன்றிய சூழல் 38

2.6 பெரிய புராண நூலமைப்பு. 41


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



| | | |
|---|---|---|
| 2.7 | பெரிய புராணமும் சமயமும் | 43 |
| 2.7.1 | பெரிய புராணம் காட்டும் சைவம் | 45 |
| 2.7.2 | பெரிய புராணத்தில் சைவ நெறிகள் | 46 |
| 2.7.2.1 | பக்தி நெறி | 47 |
| 2.7.2.2 | அன்பு நெறி | 47 |
| 2.7.2.3 | அருள் நெறி | 48 |
| 2.7.2.4 | தொண்டு நெறி | 49 |
| 2.7.2.4.1 | மக்கள் தொண்டு | 51 |
| 2.7.2.4.2 | மகேசன் தொண்டு | 54 |
| 2.7.2.5 | சித்தாந்த நெறி | 57 |
| 2.7.2.5.1 | பதி | 58 |
| 2.7.2.5.2 | பசு | 60 |
| 2.7.2.5.3 | பாசம் | 60 |
| 2.7.2.5.4 | சித்தானந்த சாதனம் | 62 |
| 2.7.2.5.5 | சித்தாந்தம் கூறும் சரியை | 64 |
| 2.8 | பெரிய புராணம் தொடர்பான பிற ஆய்வுகள் | 67 |
| 2.9 | அரசு சாரா இயக்கங்கள் | 71 |
| 2.9.1 | அரசு சாரா இயக்கங்களின் பங்கு | 73 |
| 2.10 | மலேசியாவில் அரசு சாரா இயக்கங்களின் பதிவு இலாகா | 74 |
| 2.10.1 | மலேசியாவில் அரசு சாரா இயக்கங்கள் | 75 |
| 2.10.2 | மலேசியாவில் அரசு சாரா இந்தியர் இயக்கங்கள் | 76 |
| 2.10.2.1 | மலேசிய இந்து சங்கம் | 78 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



2.10.2.2 மலேசிய இந்தியர் இளைஞர் இயக்கம் 79

2.10.2.3 மலேசிய இந்து இளைஞர் இயக்கம் 80

2.10.3 போர்ட்டிக்சன் இந்திய அரசு சாரா இயக்கங்கள் 81

2.10.3.1 மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை 81

2.10.3.2 போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம் 84

2.10.3.3 போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் 86

2.11 அரசு சாரா இயக்கங்கள் பற்றிய பிற ஆய்வுகள் 87

2.12 தொகுப்புரை 89

**இயல் 3 ஆய்வு நெறிமுறை**

3.1 முன்னுரை 90

3.2 ஆய்வு வடிவமைப்பு 91

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.3 தரவுகள் சேகரிப்பு முறை 94

3.3.1 நூலக ஆய்வு 97

3.3.2 நேர்க்காணல் 98

3.4 ஆய்வுக் கருவி 101

3.4.1 நூலக ஆய்வுக்கான ஆய்வுக் கருவி 101

3.4.2 நேர்க்காணலுக்கான ஆய்வுக் கருவி 104

3.5 தரவுகள் பகுப்பாய்வு முறை 106

3.5.1 விளக்கமுறை 106

3.6 ஆய்வுக் கோட்பாடு 109

3.7 ஆய்வு நடைமுறை 114


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


3.8 தொகுப்புரை 115

**இயல் 4 ஆய்வு முடிவுகள்**

4.1 முன்னுரை 116

4.2 சரியை தொண்டு 117

4.3 நாயன்மார்களின் தொண்டு மார்க்கங்கள் 119

4.4 நாயன்மார்களின் சரியை தொண்டுகள் 125

4.4.1 அடியார்களுக்கு அமுது படைத்தல் 127

4.4.1.1 இளையான்குடி மாறனார் 135

4.4.1.2 அப்பூதியடிகள் 138

4.4.2 அடியார்களுக்குப் பொருளுதவி செய்தல் 143

4.4.2.1 அமர்நீதியார் 149

4.4.3 அடியார்களுக்கு உடல் உழைப்பால் தொண்டுகள் புரிதல் 154

4.4.3.1 திருக்குறிப்புத் தொண்டர் 154

4.4.4 ஆலயத் திருப்பணிகள் செய்தல் 161

4.4.4.1 கணநாதர் 171

4.4.4.2 குங்கிலியக் கலயர் 174

4.4.5 பிறத் தொண்டுகள் 178

4.4.5.1 விறன்மிண்டர் 182

4.4.5.2 மெய்ப்பொருளர் 185

4.5 போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் தொண்டுகள் 189

4.5.1 சமயத் தொண்டு 191

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



4.5.1.1 மலேசிய இந்து சங்கம் வட்டாரப் போர்ட்டிக்சன் பேரவையின் சமயத் தொண்டுகள் 192

4.5.1.2 போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் சமயத் தொண்டுகள் 200

4.5.1.3 போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகத்தின் சமயத் தொண்டுகள் 202

4.5.1.4 போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயத் தொண்டுகளின் ஒப்பீடு 204

4.5.2 சமுதாயத் தொண்டு 208

4.5.2.1 மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையின் சமுதாயத் தொண்டுகள் 209

4.5.2.2 போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் சமுதாயத் தொண்டுகள் 212

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.5.2.3 போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகத்தின் சமுதாயத் தொண்டுகள் 218

4.5.2.4 போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமுதாயத் தொண்டுகளின் ஒப்பீடு 220

4.6 நாயன்மார்களின் சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகளும் - ஒப்பீடு 226

4.6.1 நாயன்மார்களின் சமயம் சார்ந்த சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயம் சார்ந்த சரியை தொண்டுகளும் - ஒப்பீடு 228

4.6.2 நாயன்மார்களின் சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளும் - ஒப்பீடு 256

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.7 தொகுப்புரை 268

**இயல் 5 ஆய்வுக் கருத்தாடல்களும் முடிவுகளும்**

5.1 முன்னுரை 271

5.2 நாயன்மார்களின் சரியை தொண்டுகள் பற்றிய கலந்துரையாடல் 272

5.3 போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகள் பற்றிய கலந்துரையாடல் 279

5.4 நாயன்மார்களின் சரியை தொண்டுகள், போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகள் பற்றிய கலந்துரையாடல் 285

5.5 ஆய்வு விளைவு 290

5.6 தொடராய்வுக்கான பரிந்துரைகள் 292

5.7 தொகுப்புரை 293

**மேற்கோள் பட்டியல்** 295

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## அட்டவணை பட்டியல்


| அட்டவணை எண் | | பக்கம் |
|---|---|---|
| 3.1 | ஆய்வுக்குட்படுத்தப்பட்ட இயக்கங்களில் தகவல் கொடுத்தோரின் பெயர்களும் அவர்களின் பொறுப்பு அல்லது பதவியும் | 100 |
| 3.2 | சரியை மார்க்கத்தைக் கடைபிடித்துத் தொண்டாற்றி நாயன்மார்கள் | 101 |
| 3.3 | சரியை நெறியில் ஒழுகிய நாயன்மார்களும் பெரிய புராணப் பாடல் எண்ணிக்கையும் | 102 |
| 3.4 | சரியை தொண்டுகளும் அதனைக் கடைபிடித்த நாயன்மார்களும் | 102 |
| 3.5 | அடியார்களுக்கு அமுது படைத்த நாயன்மார்கள் | 102 |
| 3.6 | அடியார்களுக்குப் பொருளுதவி செய்த நாயன்மார்கள் | 103 |
| 3.7 | ஆலயத் திருப்பணிகள் ஆற்றிய நாயன்மார்கள் | 103 |
| 3.8 | பிறத் தொண்டுகள் ஆற்றிய நாயன்மார்கள் | 103 |
| 3.9 | போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயத் தொண்டுகளின் ஒப்பீடு | 105 |
| 3.10 | போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமுதாயத் தொண்டுகளின் ஒப்பீடு | 105 |
| 4.1 | சரியை மார்க்கத்தைக் கடைபிடித்துத் தொண்டாற்றி நாயன்மார்கள் | 121 |
| 4.2 | சரியை நெறியில் ஒழுகிய நாயன்மார்களும் பெரிய புராணப் பாடல் எண்ணிக்கையும் | 123 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



| | | |
|---|---|---|
| 4.3 | சரியை தொண்டுகளும் அதனைக் கடைபிடித்த நாயன்மார்களும் | 126 |
| 4.4 | அடியார்களுக்கு அமுது படைத்த நாயன்மார்கள் | 133 |
| 4.5 | அடியார்களுக்குப் பொருளுதவி செய்த நாயன்மார்கள் | 148 |
| 4.6 | ஆலயத் திருப்பணிகள் ஆற்றிய நாயன்மார்கள் | 168 |
| 4.7 | பிறத் தொண்டுகள் ஆற்றிய நாயன்மார்கள் | 179 |
| 4.8 | மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையின் சமயத் தொண்டுகள் | 193 |
| 4.9 | போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் சமயத் தொண்டுகள் | 200 |
| 4.10 | போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகத்தின் சமயத் தொண்டுகள் | 203 |
| 4.11 | போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயத் தொண்டுகளின் ஒப்பீடு | 205 |
| 4.12 | மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவையின் சமுதாயத் தொண்டுகள் | 210 |
| 4.13 | போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் சமுதாயத் தொண்டுகள் | 213 |
| 4.14 | போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகத்தின் சமுதாயத் தொண்டுகள் | 218 |
| 4.15 | போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமுதாயத் தொண்டுகளின் ஒப்பீடு | 221 |
| 4.16 | நாயன்மார்களின் சமயம் சார்ந்த சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயம் சார்ந்த சரியை தொண்டுகளும் - ஒப்பீடு | 229 |
| 4.17 | நாயன்மார்களின் சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளும் - ஒப்பீடு | 257 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## படவரைவு பட்டியல்


| படவரைவு எண் | | பக்கம் |
|---|---|---|
| 1.1 | ஆய்வுக் கருத்து கட்டமைப்பு | 13 |
| 3.1 | ஆய்வு வடிவமைப்பு | 93 |
| 3.2 | தகவல் புலனாய்வு முறை | 107 |
| 3.3 | ஆய்வுக் கோட்பாடு கட்டமைப்பு | 113 |
| 3.4 | ஆய்வு நடைமுறை | 114 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## எழுத்துச் சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | |
|---|---|
| குறள் | திருக்குறள் |
| தி.தொ.பு | திருத்தொண்டர் புராணம் |
| புறம் | புறநானூறு |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# இயல் 1

## முன்னுரை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.1 அறிமுகம்

இவ்வியல் ஆய்வைப் பற்றிய முழுக் கண்ணோட்டத்தைக் காட்டுகின்றது. இவ்வாய்வின் உள்ளடக்கம் பல்வேறு கூறுகளில் பகுக்கப்பட்டுள்ளது. அவை ஆய்வு பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வின் முக்கியத்துவம், ஆய்வு எல்லை, கருச்சொல் விளக்கம், முடிவுரை என்பனவாகும்.

இவ்வியல் ஆய்வின் ஒட்டுமொத்தக் கருத்துகளையும் எடுத்தியம்பும் வகையில் அமைந்துள்ளது. மேலும், ஆய்வுச் சிக்கலுக்கு வித்திட்ட காரணிகளும் இங்கு விவரிக்கப்பட்டுள்ளன. இந்தக் காரணிகளின் அடிப்படையில் ஆய்வு நோக்கமும் அதைச் சார்ந்த வினாக்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மேலும், ஆய்வின் முக்கியத்துவமும் இவ்வியலில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இவ்வாய்வின் முக்கியத்துவம் சமுதாய நலன் கருதி வாழ்வியலை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ள உதவும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் ஆய்வு எல்லை ஆய்வின் மூலங்களை விளக்குகிறது. தவிர, இதில் சில சமயக் கோட்பாடுகளும் விளக்கப்பட்டுள்ளன.

இதைத் தவிர்த்து, கருச்சொற்கள் விளக்கம் எனும் பகுதியில், ஆய்வில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட சில கருச்சொற்களையொட்டித் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இறுதியாக, முடிவுரை ஆய்வு பின்னணி, சிக்கல், நோக்கம் ஆகியவற்றைத் தொகுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.2 ஆய்வுப் பின்னணி

உலகின் தொன்மையான சமயமாகச் சைவ சமயம் திகழ்கிறது. உலகிலுள்ள மற்ற நெறிகளைப் பிழையெனாது சித்தாந்த நெறியென்றும் சிவநெறியென்றும் போற்றப்படுகிறது சைவ சமயம். இச்சமயம் தென்னாடுடைய சிவபரம்பொருளை முழுமுதற் பொருளாகக் கொண்டது எனச் சைவ சமய வரலாறு எனும் நூலில் ந.சி.கந்தையா கூறியிருக்கிறார் (2010). அன்பு நெறியான சைவ சமய நெறியின் தோற்றம், அடியார்கள் இறைஞானத்தால் அவர்கள் உள்ளத்தினின்றும் பாடல்களாகவும் பாசுரங்களாகவும் உருபெறக் காரணமாக அமைந்தது. இறைவனின் பெருங்கருணையினைப் பெற்ற அடியார்கள் உலக மக்களும் உய்யும் பொருட்டு இறைபேற்றினை அருளிச் செய்தவையே பக்தி இலக்கியங்களாக விளங்குகின்றன

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


(குன்றக்குடி அடிகளார், 2001). இத்தகு பக்தி இலக்கியங்கள் இம்மையிலும் மறுமையிலும் கிடைக்கப்பெறும் இன்பத்தைத் தரவல்லவை (வெள்ளைவாரணர், 2002).

சைவ சமயத்திற்கு அடிப்படையாகத் திகழ்வது பன்னிரு திருமுறைகளாகும். அவற்றுள் பன்னிரண்டாம் திருமுறையாகப் போற்றப்படுவது பெரிய புராணமாகும். பன்னிரு திருமுறைகளில் பெரியதும் சிறந்ததுமான பெரிய புரணத்திற்கு நிகர் எதுவுமில்லை. தமிழ் நாட்டில் வரலாற்றுக்குட்பட்ட காலத்தில் ஊரும் பேரும் வேறுபட்டுப் பல்வகை மரபுகளில் தோன்றி பயன் கருதாது பேரன்புடன் இறைத்தொண்டாற்றிய சிவனடியார்களின் வரலாற்றைக் கூறுவதே பெரிய புராணம் (முத்துக்கருப்பன், 2010).

பெரிய புராணம் 63 நாயன்மார்களின் இறைத்தொண்டினை நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றது. இவர்கள் அறநெறி, அன்புநெறி எனும் பாணியில் தொண்டாற்றிப் பேரின்பமாகிய வீடு பேற்றினை அடைந்தனர். அவ்வாறு வீடு பேறு அடைய அவர்கள் ஒவ்வொருவரும் சமயம் காட்டும் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றனைப் பிறழாது கடைப்பிடித்து வந்தனர். அந்த அடிப்படைக் கொள்கைகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று வரையறுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் அடியார்கள் மேற்கண்ட ஏதாகிலும் ஒரு மார்க்கத்தின் துணையுடன் தங்களின் பக்தி வாழ்க்கையை மேற்கொண்டு ஒழுகி வந்தனர் (ஞானசம்பந்தன், 1999).

சத்குரு குருதேவ் முத்து கொத்தள மாரியப்ப செல்வராஜ் (மு.மா.செ) இறைவனை அடையும் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நால்வகை மார்க்கங்களைச் சிவநெறிச் சமயம் உணர்த்துகிறது எனக் குறிப்பிடுகின்றார் (2015).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அதில் சரியை திருக்கோயில் தொண்டுகளை உள்ளடக்கியது என்பதை,

> நாடு நகரமும் நற்றிருக் கோயிலுந்
> தேடித் திரிந்து சிவபெரு மானென்று
> பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
> கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே
>
> (திருமந்திரம், 1418)

(**விளக்கம்:** இதன்கண் சீலநெறி நிற்போர் திருத்தொண்டு ஓதப்பெறுகின்றது. சிவபெருமான் மெய்யடியார்கள் உய்யுமாறு ஆண்டாண்டு வெளிப்பட்டருள்கின்ற திருநாடு திருநகரம் திருக்கோவில் முதலியவற்றைத் தலையன்பால் தேடித்திரிந்து 'ஆலயம் தானும்அரனெனத் தொழுமே' என்றபடி இடையறாது தொழுவர். அங்ஙனம் தொழுவார்க்கு அகம்புறமாய் இன்றியமையாதன முறையே பாடுதலும் பணிதலுமாம். அங்ஙனம் செய்தார் நல்லுள்ளங்களைச் சிவபெருமான் திருக்கோவிலாகக் கொண்டருள்வன்.)

எனும் திருமந்திரப் பாடல்வழி எடுத்தியம்புகிறார் திருமூலர்.

முன்பிறப்பின் வினைப்பயனாலேயே உயிர்கள் ஒவ்வொன்றும் மீண்டும் மீண்டும் பிறவி எடுக்கின்றன. ‘பண்டு செய்த பல வினையின் பயன்’ (திருமுறை 5:47:1537) என இதனையே திருநாவுக்கரச சுவாமிகள் குறிப்பிடுகின்றார். சோமசுந்தரம் அவர்களும் இதையே உயிர்கள் முக்திப் பேற்றை அடையும் வரை பிறப்பெடுத்துக் கொண்டேயிருக்கும் என்று கூறியுள்ளார் (2001). எனவே, உலக வாழ்வில் உழன்று கொண்டிருக்கும் உயிர்கள் அனைத்தும் இறைவனின் அடியவராகிவிடின் பிறவித் துயரும் வாழ்க்கைத் துயரும் நீங்கும் என்பதை,

> வண்டுலா மலர் செஞ்சடை ஏகம்பன்‘
> தொண்டனாய்த் திரியாய் துயர் தீர்கவே’
>
> (திருமுறை 5:47:1537)

(**விளக்கம்:** நெஞ்சமே! நீ முற்பிறவிகளிற் செய்த பழவினைகளின் பயனைக் கண்டும் கண்டும் பின்னும் களிப்புற்றுக் கெடுகின்றனையே, வண்டு உலாவுகின்ற மலரையணிந்த செஞ்சடை உடையவனாகிய திருவேகம்பத்துப் பெருமானுக்குத் தொண்டனாகி உன் துயர்கள் தீரும்பொருட்டுத் திரிவாயாக. கு-ரை; பண்டு செய்த பழவினை-முற்பிறவிகளிற் செய்த சஞ்சிதம். பயன்-பிராரத்தம். கண்டும் கண்டும்-அனுபவத்தால் பார்த்தும் பார்த்தும். களித்தி-களிப்படைகின்றாய். காண்-அசை. வண்டுலா மலர்-தேனுண்ண வண்டுகள் உலவுகின்ற மலர்கள். திரியாய்-திரிவாயாக. துயர்தீர -அத்துன்பம் நீங்க.)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


எனும் பாடல்வழி உணர்த்துகிறார் திருநாவுக்கரசர். செந்தமிழரின் இறை கொள்கையான சைவ சித்தாந்தம் பதியாகிய இறைவனை அடைய பசுக்களான உயிர்கள் தம்மைப் பற்றியிருக்கும் பாசம் எனும் அழுக்கினை அல்லது மலத்தினை முதலில் நீங்கப் பெற வேண்டும் என்றுரைக்கின்றது. சைவ சித்தாந்தம் குறிப்பிடும் சீலம், நோன்பு, செறிவு, அறிவு (சரியை, கிரியை, யோகம், ஞானம்) என்கிற நன்னெறி நான்கினையும் பின்பற்றினாலேயே உயிர்கள் மலம் நீங்கி இறைவனை அடைய இயலும் என்கிறார் ந.தர்மலிங்கம் (2012).

பெரிய புராணம் இறையின்பம் எய்திய 63 நாயன்மார்களும் சித்தாந்தக் கொள்கைகளான சரியை, கிரியை, யோகம், ஞானமாகிய நான்கு மார்க்கங்களில் ஒன்றனை உறுதியாகக் கடைபிடித்தவர்களேயாவர் என தி.என். இராமசந்திரன் (2005) கூறுகிறார். இவற்றுள் சரியை மார்க்கமே பெரும்பான்மையிலான நாயன்மார்களை முக்திக்கு அழைத்துச் சென்றுள்ளது. நாயன்மார்களில் பலரும் சரியை எனும் தொண்டு நெறிக்கு உட்பட்ட பல செயல்களைச் செய்து அதன் வழியிலே உறுதியாய் நின்று இறைவனை அடைந்தனர் என்பதே கலியாணசுந்தரனாரின் கருத்து (2014).

எனவே, இந்த ஆய்வில் சரியை மார்க்கத்தைப் பின்பற்றி இறைவனின் அன்பிற்குத் தங்களை ஆளாக்கிக் கொண்டு பேரின்பமாகிய வீடு பேற்றினை அடைந்த நாயன்மார்களின் வரலாறுகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அன்பு நெறியான சிவநெறியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட நாயன்மார்கள் அக்கால மக்களுக்கு மட்டுமின்றி இக்கால மானுட குலத்தின் நன்மை கருதியும் தொண்டாற்றியுள்ளனர் என்று பகர்கின்றார் மணிவாசகன் (2010).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


'அன்பே சிவம்' என்பது நாம் அறிந்த ஒன்றே. ஆதலின், பற்பல விதிமுறைகளை வகுத்துக் கொண்டு இறைவனை வழிபடுவதைக் காட்டிலும் அவரவர்க்கு இயன்ற வகையில் எளிய முறையில் அன்பு நெறியில் சிறு சிறு தொண்டுகள் புரிந்தும் இறைவனிடத்தில் ஓர் உறவினை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று சைவ சித்தாந்தம் தெளிவுறுத்துவதாக ந.தர்மலிங்கம் (2012) கூறியுள்ளார். மேலும், இவ்வுலக வாழ்க்கையில் அன்பு நெறியில் தொண்டாற்றி இறைவனின் திருவடி நீழலில் ஒன்றி விட்ட நாயன்மார்களின் வாழ்வியல் நெறிகளைப் பின்பற்றுவதற்கும் சைவம் சிந்தாந்தம் பரிந்துரைக்கின்றது என்கிறார் அவர் (2012).

சைவ சித்தாந்தக் கொள்கையான சரியையின் அடிப்படையில் ஒன்றான எளிய முறையிலான தொண்டுகள் இன்றளவும் நம் சமுதாயத்தின் ஒரு கூறாகவே திகழ்ந்து வருகின்றன. தற்போதைய சூழலில் தனிமனிதர்கள் மட்டுமின்றி குடும்பம், சமுதாயம், அரசு என அனைத்தும் தத்தம் சக்திக்கு ஏற்றவாறு தொண்டுகள் ஆற்றுவதைக் கடமையாகக் கொண்டுள்ளன. இதில் சில அரசு சாரா இயக்கங்களும் விதிவிலக்கல்ல. உலகளாவிய நிலையில் பல அரசு சாரா இயக்கங்கள் மக்களுக்குத் தொண்டாற்றுவதையே தங்களின் முக்கியக் குறிக்கோளாக எண்ணிச் செயல்படுகின்றன என்கிறார் நோர்மா மன்சூர் (Norma Mansor, 2014).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மலேசியாவைப் பொருத்த மட்டிலும், பல அரசு சாரா இயக்கங்கள் சமுதாயப் பணிகளைச் செய்து வந்துள்ளன. இது போன்ற இயக்கங்களின் நடவடிக்கைகள் மலேசிய அமைப்புகள் பதிவு இலாகாவின் கட்டுப்பாட்டுக்குள் உட்பட்டதாக அமைந்துள்ளன (மலேசிய அமைப்புகள் பதிவு இலாகா, 2017). 'தொண்டு' என்பதையே தங்களின் கருப்பொருளாகக் கொண்டு இந்தியச் சமுதாயத்திற்குப் பல தொண்டுகள் புரிந்து வரும் 'மலேசிய இந்து சங்கம்' இங்குக் குறிப்பிடத்தக்கது. சமுதாயப் பணிகளைச் செவ்வனே

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


செய்யும் மலேசிய இந்து இளைஞர் மணிமன்றம், மலேசிய இந்திய இளைஞர் இயக்கம் போன்றவையும் இதற்குச் சளைத்தவையல்ல. மலேசியா உட்பட உலகளாவிய நிலையில் இது போன்ற அரசு சாரா இயக்கங்கள் மக்களின் நல்வாழ்விற்குத் துணைபுரியும் பல தரப்பட்ட உதவிகளைச் செய்வதற்காகவே தோற்றுவிக்கப்பட்டுள்ளன என நோர்மா மன்சூர் தெரிவிக்கிறார் (Norma Mansor, 2014).

பெரிய புராணம் தொடர்பான பல ஆய்வுகள் இதற்கு முன்பதாகவே மேற்கொள்ளப்பட்டிருப்பினும் அவை யாவும் அடியார்களின் பக்தி நெறியை மட்டுமே காட்டும் வகையில் அமைந்துள்ளன. நாயன்மார்களின் தொண்டு நெறியைப் பற்றி உரைப்பதாக அமையவில்லை என அ.ச.ஞானசம்பந்தன் (1994) கூறியுள்ளார். சித்தாந்தக் கொள்கையான சரியை மார்க்கத்தின் அடிப்படையில் நாயன்மார்களின் தொண்டுணர்வையும் மக்கள் தொண்டைக் கருத்தில் கொண்டு இயங்கும் இக்கால அரசு சாரா இயக்கங்களின் சீரிய பணிகளையும் எடுத்தியம்பும்படியான ஆய்வுகள் இன்னும் இல்லை. தொண்டு நெறியின் அடிப்படையில் இல்லாத வாழ்வு சிறந்த வாழ்வாகாது என்பது க.திரவியம் (2001) அவர்களின் கூற்றாகும். தொண்டு மக்களின் நல்வாழ்வுக்கு வழிவகுப்பதோடு உலக நன்மைக்கும் வித்திடும். இதனையே நாயன்மார்களின் வாழ்வும் சித்திரிக்கின்றது. எனவே, இவ்வாய்வில் பக்தி நெறியில் நின்று தன்னலம் கருதாது பிறர் நலம் போற்றித் தொண்டாற்றிய 63 நாயன்மார்களின் சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சேவைகளும் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.3 ஆய்வுச் சிக்கல்

மானுட வாழ்க்கையினை நெறிப்படுத்தி, ஒழுக்கமிக்கவர்களாக இப்பூவுலகில் வாழவும் மக்கள் யாவரும் ஒன்றே எனும் குறிக்கோளை அடையவும் வழிகாட்டி நிற்பவை பக்தி இலக்கியங்களே என்கிறார் அ.மு.பரமசிவானந்தம் (1972). ஒவ்வொருவரும் அவரவர் விருப்பத்திற்கேற்பத் தங்களால் இயன்ற எளிய முறையில் எல்லாம் வல்ல பரம்பொருளிடம் பக்தி செலுத்தி ஈடுபடும் பொழுது அமைதியான வாழ்வு நிலைபெறுவது திண்ணம். அத்தகையதொரு அறவாழ்வை உணர்த்திக் காட்டுவதற்கும் சைவ சித்தாந்தம் கூறும் தொண்டு நெறியைக் கடைப்பிடித்து ஒழுகவும் சமுதாயக் கீழ்மைகள் மறைந்து போகவும் பெரிய புராணம் வழிகாட்டுகின்றது.

பெரிய புராணம் 63 நாயன்மார்களின் வரலாற்றினைத் தொகுத்துக் கூறும் களஞ்சியமாக மட்டுமல்லாது சிந்தாந்தக் கொள்கைகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றைப் பறைசாற்றும் களமாகவும் திகழ்கிறது. தமிழ் இலக்கிய ஆய்வுலகில் பெரிய புராணம் பல நோக்கங்களுக்காக உட்படுத்தப்பட்டு வந்துள்ளது. இருப்பினும், இந்நன்னெறி நான்கினையும், குறிப்பாகச் சரியை எனப்படும் அடியார்களின் தொண்டு நெறி குறித்த ஆய்வுகள் மிகக் குறைவாகவே உள்ளன. பெரிய புராணம் ஒன்றுதான் அடியார்களின் தொண்டின் மாண்பை அக்காலக்கட்டத்தில் எடுத்தியம்பியது என்பதை அ.ச.ஞானசம்பந்தன் குறிப்பிடுகின்றார் (1994).

அக்காலத்தில் அடியார்களின் தொண்டு பெரும்பாலும் கோயில் தொண்டாகவே இருந்ததெனினும் மக்களின் துயர் தீர்த்தது. ‘மக்கள் தொண்டே மகேசன் தொண்டு’ எனும் அடிப்படையில் அடியார்களின் தொண்டு மக்களைச் சென்றடைந்தது. அதே நிலையில் இன்று உலகளாவிய நிலையில் தொண்டுகள் என்பது மனிதக் குலத்திற்காகச்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


செய்யப்படும் அடிப்படைத் தொண்டாக மாறியுள்ளது. மக்களுக்காகச் செய்யப்படும் இத்தகையத் தொண்டுகள் இறைவனையே அடைகிறது என்றும் கூறலாம் (முத்துசண்முகம், 1989). பணம், பொருள், நேரம், சேவை ஆகியவற்றைப் பேறு குறைந்தவர்களுக்கு அளிப்பதே தொண்டு எனப்படுவதாக ஜோசப் மெத்தியூ (2000) குறிப்பிடுகின்றார். தொண்டுணர்வு அடிப்படையில் செய்யப்படும் சேவையினால் வாழ்வும் திருப்திகரமாக அமையும் எனவும் குமரன் இராமையா (2015) மலாயாப் பல்கலைக்கழகத் தமிழ் பேராய்வு ஆய்விதழில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, தற்காலச் சூழலில் தொண்டு நெறி என்பது சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளை அறிந்து திறந்த மனத்தோடு சேவையாற்றவும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் வழிவகுத்துள்ளது (குமரன் இராமையா, 2015). இக்காலக்கட்டத்தில் அரசு சாரா இயக்கங்கள் தொண்டு எனும் அடிப்படையில் பல வழிகளில் மக்களின் இன்னல்களைத் தீர்ப்பதில் பங்காற்றி வந்துள்ளன என்பது நோர்மா மன்சூர் அவர்களின் கருத்தாகும் (Norma Mansor, 2014).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

உலகளாவிய நிலையில் இயங்கி வரும் அரசு சாரா இயக்கங்கள் பலவும் உள்நாட்டிலும் தொண்டாற்றுவதைத் தங்கள் கடமையாகக் கொண்டுள்ளன. இவ்வியக்கங்கள் தேசிய அளவில் நின்றுவிடாமல் மாநிலம், வட்டாரம் எனச் சேவைகள் செய்து வந்துள்ளன. அந்த வகையில் போர்ட்டிக்சனில் செயல்படும் பல அரசு சாரா இயக்கங்களுள் இந்தியச் சமுதாயத்தைச் சார்ந்து தொண்டாற்றி வரும் சில இயக்கங்கள் இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இந்த இயக்கங்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல்படினும் அவை மக்களின் மேம்பாட்டிற்கு வழிவகுக்கவில்லை என்பது இங்குள்ளோரின் பரவலான கருத்து. மேலும், இவர்களின்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தொண்டு சரியை அடிப்படையில் அமைந்துள்ளனவா என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது.

ஆகவே, மானுட வாழ்க்கையே இயந்திரத் தன்மையுடையதாக மாறிக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில் தன்னலமின்றித் தொண்டாற்றும் எண்ணம் மேலோங்கவும் சமுதாயத்தின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்யவும் எத்தகைய சேவைகள் வழிகோலும் என்பதை ஆராயவும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தொண்டுணர்வின் மூலமாக மக்களின் மனங்களைச் செம்மைப்படுத்தி வாழ்க்கையைச் சீராக அமைத்துக் கொள்ள முடியும் என்பதாலும் இவ்வாய்வு இன்றியமையாத ஒன்றாகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.4 ஆய்வின் நோக்கம்

இந்த ஆய்வு பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சரியை தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சரியை தொண்டுகளும் ஓர் ஆய்வு எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் நோக்கம் பின்வருமாறு அமைந்துள்ளது:

i. பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சமயம், சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளை அடையாளம் காணுதல்.

ii. போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயம், சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளை அடையாளம் காணுதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

iii. பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சமயம், சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளையும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயம், சமுதாயம் சார்ந்த சரியை தொண்டுகளையும் ஒப்பீடு செய்தல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.5 ஆய்வு வினா

ஆய்வு வினா ஆய்வின் நோக்கத்தை முன்னோடியாகக் கொண்டே அமைக்கப்பட்டுள்ளது. ஆய்வு வினாக்கள் பின்வருமாறு:

i. சைவ சித்தாந்தம் காட்டும் சரியை மார்க்கம் யாது?

ii. பெரிய புராணத்தில் நாயன்மார்கள் சரியை தொண்டுகள் யாவை?

iii. போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் சமயத் தொண்டுகளும் சமுதாயத் தொண்டுகளும் யாவை?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


iv. போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் தொண்டுகள் பெரிய புராணம் காட்டும் தொண்டுகளை அடிப்படையாகக் கொண்டு திகழ்கின்றதா?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**1.6 ஆய்வுக் கருத்துக் கட்டமைப்பு**

**படவரைவு 1.1** ஆய்வுக் கருத்துக் கட்டமைப்பைக் காட்டுகிறது.




*படவரைவு 1.1.* ஆய்வுக் கருத்துக் கட்டமைப்பு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.7 ஆய்வின் முக்கியத்துவம்

ஓர் இலக்கியம் அது சார்ந்த சமுதாயத்திற்கு நல்லறங்களைக் காட்டும் அறநூலாகவும் மானுட வாழ்க்கையின் மேன்மையான நிலைக்கு வழிகாட்டும் வாழ்வியல் களஞ்சியமாகவும் திகழ்வது அவசியமாகிறது. இவ்வாய்வுக்குக் களமாக விளங்கும் பெரிய புராணம் பக்தி நெறியும் தொண்டு நெறியும் ஒருங்கே அமையப்பெற்ற மாக்கதையாகும். அதன் அடிப்படையில் சரியை தொண்டு பற்றிய இந்த ஆய்வு மேலும் சைவ சமயத்தின் சிறப்புகளை மேலோங்கச் செய்யும்.

தமிழ் இலக்கிய ஆய்வுலகில் பெரிய புராணம் பல ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டிருப்பினும் அவை யாவும் பெரும்பாலும் ஆன்மிகத்தை ஒட்டியே அமைந்துள்ளன. பெரிய புராணத்தில் சமுதாய நிலைகள், அறம், நீதிமுறைமை போன்றவையே அதிகம் பேசப்பட்டுள்ளன. இறைவனை அடையும் எளிய வழியாகிய நாயன்மார்களின் தன்னலம் கருதாத் தொண்டு நெறி பெரிய புராணம் தோன்றுவதற்கு முன்னும் குறைவாகவே எடுத்தாளப்பட்டுள்ளது என்பதை அ.ச.ஞானசம்பந்தன் (1994) அவர்கள் விளக்கக் காணலாம். அதே வேளையில் இன்றைய சூழலில் காணப்பெறும் சமுதாயச் சேவைகளும் சமயம் சார்ந்த சேவைகளும் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்றே கூறலாம். எனவே, இவ்வாய்வு பேரின்பப் பேற்றை அடையும் சரியை தொண்டை அடையாளங்காணும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெரிய புராணத்தைப் பற்றிய தெளிவான விளக்கம் பெறவும் இவ்வாய்வு முக்கியமானதாகக் கருதப்படுகிறது. பெரிய புராணம் காட்டும் நாயன்மார்களின் சரியை தொண்டு இவ்வாய்வைப் படிப்போர்க்கு வாழ்வில் வழிகாட்டியாகத் திகழும். மேலும், இறைவனுக்கும் அவனது அடியார்களுக்கும் செய்யக்கூடிய எளிய முறையான

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



தொண்டுகளைப் பறைசாற்றும். இதன்வழி, ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவுக்கு மக்களுக்குத் தொண்டாற்றுவதில் ஈடுபாடு காட்டுவர். அதே வேளையில் இம்மையிலும் மறுமையிலும் இறையின்பத்தைத் தரவல்ல தொண்டுணர்வோடு செயல்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

தவிர, அரசு சாரா இயக்கங்கள் மக்களுக்காக ஆற்றும் தொண்டுகளையும் இவ்வாய்வு அனைவரும் அறியும்படி செய்யும். இது போன்ற அரசு சாரா இயக்கங்களும் மக்களின் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டு மேலும் சீரிய பணிகளையும் சேவைகளையும் ஆற்றுவர் என்றும் உறுதியாக நம்பலாம். பெரிய புராணம் காட்டும் அறநெறியில் ஆற்றப்படும் தொண்டுகளினால் இவ்வியக்கங்கள் சாதி, சமய, மத பேதமின்றி தங்கள் சேவைகளை நிலைபெறச் செய்ய முடியும். இவ்வியக்கங்கள் மக்களின் நிலையறிந்து, தேவையறிந்து செயல்படவும் இந்த ஆய்வு வழிவகுக்கும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதைத் தவிர்த்து ‘மக்கள் தொண்டே மகேசன் தொண்டு’ எனும் அடிப்படையில் ஒவ்வொருவரும் இனி சமுதாய மேம்பாட்டிற்குத் தொண்டாற்ற முன்வருவர் என்றும் நம்பலாம். நாயன்மார்களின் வரலாறு இவர்களுக்கு ஒரு முன்னோடியாக அமையும். மக்களுக்குச் செய்யப்படும் தொண்டுகள் யாவும் இறைவனையே சாரும் என்பதை உணரும் மனப்பக்குவமும் மேலோங்கும். இதனால் தனிமனிதனாகத் தொண்டாற்ற முடியாவிட்டாலும் நாடு தழுவிய நிலையில் இயங்கி வரும் அரசு சாரா இயக்கங்களோடு மக்கள் கைக்கோர்த்துச் செயலாற்ற இவ்வாய்வு துணைபுரியும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மேலும், இவ்வாய்வானது இளையோர் சமுதாயத்திற்கு ஒரு தூண்டுகோலாகவும் அமையும். நிலையில்லா வாழ்வியல் கொள்கைகளில் ஈடுபாடு காட்டும் நம் இளையச் சமுதாயம் அறவாழ்வை உணர்ந்து நன்னெறியைக் கடைப்பிடித்து மேலோங்கவும் இது துணைபுரியும். இவர்களும் தங்களைத் தொண்டு நெறியில் அர்ப்பணித்துக் கொண்டு மக்களுக்குச் சேவையாற்றுவர் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இறுதியாக, தமிழ் இலக்கிய ஆய்வுலகில் பெரிய புராணம் பன்முக நோக்கில் உட்படுத்தப்பட்டு அதன் தனித்தன்மைகள் ஆராய்ந்து வெளிப்படவும் இவ்வாய்வு உதவும். சமுதாய நலன் கருதிய தொண்டுகளை வெளிக்கொணரவும் இந்த ஆய்வு ஏதுவாக அமையும். மேலும், இத்தலைப்பினை அடியொற்றி எதிர்காலத்தில் பல புதிய ஆய்வுக்களங்களும் உருபெறும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.8 ஆய்வு எல்லை

ஆய்வு முடிவுகள் பயனுள்ளதாக அமையும் நோக்கில் இவ்வாய்வு ஒரு குறிப்பிட்ட கோணத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. இதில் பெரிய புராணம் மூல நூலாக எடுத்தாளப்பட்டுள்ளது. பெரிய புராணம் 63 நாயன்மார்களின் வரலாற்றுத் தொகுப்பாகும். சேக்கிழாரின் பெரிய புராண நூலுக்குப் பலர் உரை எழுதியிருப்பினும் இவ்வாய்வில் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் 1972-ஆம் ஆண்டு வெளியீடு செய்த மங்கையர்கரசி அவர்களின் 'சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணம்' எனும் நூல் முதன்மை ஆதாரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வில் பெரிய புராணத்தில் இடம்பெறும் பாடல் எண் வரிசை இந்த நூலைப் பின்பற்றியே சுட்டப்பட்டுள்ளது. தவிர, பக்தி இலக்கியம் தொடர்பான நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கலைக்களஞ்சியங்கள் போன்றவையும் துணை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், பெரிய புராணம் காட்டும் சரியை எனப்படும் தொண்டு நெறி மட்டுமே இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், போர்ட்டிக்சன் வட்டார அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் தொண்டுகளும் இங்குக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை, போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம், போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் ஆகியவையே ஆய்வுக்குட்படுத்தப்பட்ட இயக்கங்களாகும். பெரிய புராணத் தொண்டுகளும் போர்ட்டிக்சன் அரசு சாரா இந்தியர் இயக்கங்களின் தொண்டுகளும் சமயம், சமுதாயம் என்ற அடிப்படையில் மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளன. பெரிய புராணம் காட்டும் சரியை தொண்டுகளின் அடிப்படையில் இவ்வியக்கங்களின் தொண்டுகள் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதைத் தவிர்த்து, மெய்கண்டார் எழுதிய சைவ சித்தாந்தத்தின் துணையுடன் தொண்டு எனப்படும் சரியை அடிப்படையிலான கோட்பாடுகளை இவ்வாய்வு தாங்கி நிற்கிறது. எனவே, சைவ சித்தாந்தக் கோட்பாடுகளான பதி, பசு, பாசம் ஆகியவை மூன்றும் ஆய்வுக் கோட்பாடுகளாக எடுத்தாளப்பட்டுள்ளன. சமுதாயப் பணிகளை முன்நிறுத்தி மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு பக்தி நெறி மார்க்கமும் சரியை எனப்படும் தொண்டு நெறி மார்க்கமும் எனும் அடிப்படையிலும் அமைந்துள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.9 கருச்சொல் விளக்கம்

இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்ட சில கலைச்சொற்களின் விளக்கம் கீழ்க்கண்டவாறு அமைகிறது.

### 1.9.1 பெரிய புராணம்

திருத்தொண்டர் புராணம் எனும் இந்நூல் பெரிய புராணம், திருத்தொண்டர் மாக்கதை எனும் பெயர்களில் வழங்கப்படுகிறது. சேக்கிழார் இதற்கு இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம் என்பதாகும். இதனை,

இங்கிதன் நாமம் கூறின் இவ்வுல கத்து முன்னாள்
தங்கிருள் இரண்டில் மாக்கள் சிந்தையுட்சார்ந்து நின்ற
பொங்கிய இருளை ஏனைப் புறவிருள் போக்குகின்ற
செங்கதி ரவன்போல் நீக்கும் திருத் தொண்டர்புராணம் என்பாம்
(தி.தொ.பு. 10)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

(**விளக்கம்:** (இ-ள்.) இங்கு.....கூறின் - இப்புராணத்தின் பெயர் என்னென்று சொல்வோமாயின்; இவ்வுலகத்து....இரண்டில்அநாதிகாலந் தொட்டு இங்குள்ள இருவேறு இருள்களுள்ளே;ஏனை செங்கதிரவன்போல் - மற்றப் புற இருளைப்போக்குகின்ற சூரியனைப்போல; மாக்கள் இருளை -மாக்களின் உயிரினிடத்தே பொருந்தி நின்ற பொங்கிய அகஇருளாகிய ஆணவத்தைப் போக்குகின்ற; திருத்தொண்டர் புராணம் என்பாம் - திருத்தொண்டர் புராணம் என்று சொல்வோம்.)

எனும் பாடல் வழி அறியலாம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சேக்கிழார் பெரிய புராணம் பாடச் சுந்தரரின் திருத்தொண்டர் தொகையும் நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியும் துணை நூல்களாகப் பயன்பட்டன என்கிறார் வெள்ளைவாரணர் (2008). பயன் கருதாது பேரன்புடன் இறைவனை வழிபட்டு அவனருள் பெற்ற 63 நாயன்மார்களின் வரலாற்றுத் தொகுப்பே பெரிய புராணம் (இராசமாணிக்கனார், 1996).

சமண சமயம் மேலோங்கிக் கிடந்த காலக்கட்டத்தில் சேக்கிழார் பெருமான் மீண்டும் சைவம் தழைத்தோங்கவே பெரிய புராணம் பாடினார் என்கிறார் இராசமாணிக்கனார் (1996). 63 நாயன்மார்களின் வரலாற்றினை நன்கு ஆராய்ந்தறிந்த பின்னரே சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தைத் தில்லையில் அரங்கேற்றம் செய்ததாகக் கலியாணசுந்தரனார் குறிப்பிடுகின்றார் (2000).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பெரிய புராணம் 63 நாயன்மார்களின் வரலாற்றினை மட்டுமல்லாது சைவ சமயத்திற்குத் தொண்டு செய்த மேலும் ஒன்பது தொகையடியார்களையும் போற்றிப் புகழ்கின்றது. சைவ சமயத்தின் அடிப்படை நூல்களாக விளங்கும் பன்னிரு திருமுறைகளில் 12-வது திருமுறையாகப் பெரிய புராணம் விளங்குகிறது (கிருபானந்த வாரியார், 2003).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.9.2 நாயன்மார்கள்

தமிழ்நாட்டில் வாழ்ந்த சிவனடியார்கள் நாயன்மார்கள் என்றழைக்கப்படுகின்றனர். இறைவனின் திருவடியில் அன்பு செலுத்தித் தலைமை பேறு எய்தியவர்கள் நாயன்மார்கள். 'நாயன்' எனும் சொல் தலைவன் என்று பொருள்படும். நாயன்மார்கள் என்றால் தலைவர்கள் என்றும் கூறலாம். எனவே, இறைவன் என்கிற தலைவனைப் போற்றிய தலைவர்கள் என்பது சாலப் பொருந்தும். நாயன்மார் என்ற சொல்லுக்கு இன்னும் பலர் பலவாறு பொருள் கூறினும் கருத்து ஒன்றேயாகும் எனத் திரு.வி.கலியாணசுந்தரனார் (1922) நாயன்மார் திறம் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

நாயன்மார் எனும் பெயர் தலைவர், கடவுளர், பெருமையிற் சிறந்தோர் என பொருள் கொண்டதாக இருப்பினும் பெரிய புராணத்தில் வரும் 63 தனியடியார்களையே சிறப்பாகக் குறிக்கிறது எனக் கலைக்களஞ்சியம் எனும் நூல் கூறுகின்றது (1954). தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில், பல்வேறு மரபுகளில், பல்வேறு சாதிகளில் தோன்றியவர்களே 63 நாயன்மார்கள் எனத் திரு.வி.கலியாணசுந்தரனார் (2014) மேலும் கூறுகிறார். இராசமாணிக்கனாரும் (1996) நாயன்மார்கள் அறுபத்து மூவரே எனக் கூறியுள்ளார். எனவே, வாழ்க்கை குறிக்கோளில் உறைப்பாய் நின்று தொண்டாற்றிச் சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டவர்களை நாயன்மார்கள் என்றும் கூறலாம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.9.3 அடியார்கள்

அடியார்கள் எனும் சொல் ஒன்றுக்கு அடிமைப்பட்டவர் என்பதைக் குறிக்கும். அடியார்கள் கடவுளுக்கும் மக்களுக்கும் தொண்டு செய்பவர்கள் ஆவர். மேலும், சமய வேடம் தாங்கியவர்களையும் இச்சொல் குறிப்பதாக ஆறுமுகம் (1989) தமது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். 'நான்' என்ற அகந்தையும் 'எனது' என்ற அகங்காரமும் அற்றவர்களே அடியார்கள். இவர்கள் இறைவனை வணங்க மன அடக்கம் வேண்டும் என்பதை நன்குணர்ந்தவர்கள். இறைவன்பால் காதல் கொண்டு பற்பல சோதனைகளையும் சாதனையாக்கியவர்கள் மட்டுமே அடியார்கள் என வழங்கப்பெறுவர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அடியார்கள் அன்பே வடிவானவர்கள்; தங்களது உடல், பொருள், ஆவி அனைத்தையும் இறைவனுக்கே அர்ப்பணித்து வாழ்ந்தவர்கள்; இறையடியார்களிடத்தில் இறைவனைக் காணும் மனப்பக்குவம் உடையவர்கள். தங்கள் மேனியில் பூசும் திருநீற்றைப்போல் புனிதமானவர்கள் எனச் சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தில் கூறுகிறார். மேலும், அடியார்கள் தொண்டு செய்வதையே குறிக்கோளாகக் கொண்டவர்கள். தொண்டு நெறியைக் கடைபிடித்தவர்களே அடியார்கள் எனவும் அ.ச.ஞானசம்பந்தன் (1999) பெரிய புராணம் - ஓர் ஆய்வு எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். எனவே, இறைவனின் பெயரால் உயிர்களுக்குத் தொண்டு செய்பவர்களை அடியார்கள் என்பது தகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.9.4 சித்தாந்தம்

சிவனை முழுமுதற் பொருளாக எண்ணி வழிபடுகின்ற சமய நெறியான சைவ சமயத்துக்கு அடிப்படையாக மெய்கண்டாரின் சைவ சித்தாந்தம் எனும் தத்துவப் பிரிவு விளங்குகிறது. ஆன்மிகம் தொடர்பான பல்வேறு கருத்துகளையும் ஆராய்ந்து அதன் தொடர்பாகக் கடவுள், உயிர், உலகம் பற்றியக் கருத்துகளைச் சிந்தித்து முடிந்த முடிவாகக் காணப்பட்டதுதான் சித்தாந்தம் என்கிறார் நாகப்பன் ஆறுமுகம் (2008).

சிந்தித்துக் கண்டறிந்த முடிவான உண்மையே சித்தாந்தம் என்று பொருள்படும் (அந்தம் - முடிவு). சைவ ஆகமங்கள் குறிப்பிடும் கடவுள் கொள்கைகளைச் சித்தாந்தம் எனத் திருமூலர் குறிப்பிடுகிறார். திருமூலர்தான் சிந்தாந்தம் எனும் சொல்லை முதன்முதலில் சமயத்துறையில் பயன்படுத்திய அறிஞராவார் (நாகப்பன் ஆறுமுகம், 05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
2008).

பதி , பசு , பாசம் ஆகிய மூன்றையும் என்றும் நிலையான பொருள்களாக ஏற்றுக் கொள்வது சைவ சித்தாந்தத்தின் அடிப்படையாகும் (ஆனந்தரசன், 2003). சைவ சித்தாந்தத்தின்படி இம்மூன்றும் முதலும் முடிவும் இல்லாதவை. இதனால், இம்மூன்றையும் யாரும் படைத்ததில்லை என்கிறது சைவ சித்தாந்தம். ஆயினும், என்றும் நிலையாக உள்ள இம்மூன்றும் வெவ்வேறு தன்மைகளைக் கொண்டவை.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.9.5 பதி

பதி என்பது தலைவன், அரசன், பிரபஞ்சத்தின் ஆட்சியாளன் (நந்தலாலா, 2008 ). சைவ சித்தாந்தத் தத்துவம் பதியை இறைவன் என்கிறது. அறிவு வடிவாகவே இருக்கும் இறைவன் எல்லாம் அறிந்தவன்; எங்கும் நிறைந்திருப்பவன்; அளவற்ற வல்லமை பெற்றவன். இந்தப் பிரபஞ்சத்தை ஒரு மாபெரும் சக்தி படைத்துக் காப்பாற்றுகிறது என்பதே தமிழர்களின் நம்பிக்கை (நிர்மலா தேவி, 2013).

சைவ சமயம் பதியாகிய இறைவனே பிரபஞ்சத்தைப் படைத்தான் என்கிறது. தனது குறைகளையறிந்த மனிதனே பூரணத்துவம் பெற்ற பதியை உணர முடியும் எனக் கூறுகிறார் முனைவர் நாகப்பன் ஆறுமுகம் (2008). பதியாகிய இறைவன் ஒவ்வொரு ஆன்மாவுக்குள்ளும் உறைகின்றான்; தவிர மனிதனின் கற்பனைக்கெட்டாதவாறு எங்கும் வியாபித்திருக்கின்றான் எனத் திருமந்திரம் இயம்புகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.6 பசு

பசு எனும் சொல் உயிர்களைக் குறிக்கும். பசுவாகிய உயிர்கள் ஆணவத்தால் கட்டப்பட்டுக் கிடப்பவை. உயிர், ஆன்மா, ஆத்மா, அணு என்றும் சொல்லப்படும் (நாகப்பன் ஆறுமுகம், 2008). உயிர்கள் எண்ணிலடங்காதவை என்பதால் சைவ மெய்கண்ட நூல்கள் அவற்றை எண்ணிலி என்கின்றன. உயிர்கள் அநாதியானவையே என்றும் இறைவனால் தோற்றுவிக்கப்படாதவையே என்றும் சைவ சித்தாந்தம் கூறுவதாக ந.தர்மலிங்கம் (2012) பகர்கின்றார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மேலும் அவர் உயிர்கள் இயல்பாகவே அறிவுள்ளவை; ஆனால் மலங்களினால் பிணிக்கப்படும்போது அவற்றின் அறிவு மறைக்கப்படுகிறது என்கிறார் (2012). எனவே, மலங்களின் பிணிப்பிலிருந்து தாங்களாகவே விடுபடுவதற்கு உயிர்களால் முடியாது. இறைவனின் துணையுடனேயே மலங்களின் பிடியிலிருந்து உயிர்களால் விடுபட முடியும். இறைவன் உயிர்களுக்கு உடலும் உலகமும் கொடுத்துச் செயல்படுத்துகிறான். அதன் மூலம் உயிர்களின் அறிவு, இச்சை, செயல் ஆகியவற்றை இயங்கச் செய்கின்றான். (நாகப்பன் ஆறுமுகம், 2008).

### 1.9.7 பாசம்

பாசம் எனும் சொல் கட்டு அல்லது தளை என்று பொருள்படும். பாசம் உயிர்களின் அறிவு, இச்சை, செயல் ஆகியன இயங்காமல் கட்டிப்போடுகின்றது. உயிர்களைப் பற்றியிருக்கும் அழுக்கு அல்லது மலமே பாசம் என்கிறார் ந.தர்மலிங்கம் (2012). மலங்கள் சடப்பொருள்கள்; அறிவற்றவை; இம்மலமானது மூவகைப்படும் என்பதால் மும்மலம் எனவும் குறிப்பிடப்படுகின்றது. அவை ஆணவம், கன்மம், மாயை என்பனவாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆணவ மலம் உயிர்களை ஆரம்பம் முதலே பிணித்து அவற்றின் அறிவை மறைக்கும் வல்லமை கொண்டது. இதுவே உயிர்களை அறியாமை எனும் பள்ளத்தில் தள்ளுகின்றது (தர்மலிங்கம், 2012). இதனால் உயிர்கள் இறைவனையும் அடைய முடியாமல் நிற்கின்றன. இதனாலேயே இறைவன் உயிர்களுக்குக் கன்மம், மாயை என்ற இரு மலங்களையும் கொடுத்து ஆணவத்தைப் போக்குகின்றான் எனச் சைவ சித்தாந்தம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கூறுவதாக மேலும் அவர் (2012) குறிப்பிடுகின்றார். எனவே, உயிர்கள் இறைவனை நெருங்கும்போது பாசம் தன்னாலேயே நீங்கிவிடும்.

### 1.9.8 சரியை

சரியை 'தொண்டு நெறி' அல்லது 'தாச நெறி' என்றும் அழைக்கப்படுகிறது (நாகப்பன் ஆறுமுகம், 2008). திருக்கோயில் தொண்டுகள் புரிவதே சரியை எனப்படும் எனக் கௌசல்யா (1996) மேலும் விளக்குகிறார். இறைவனுக்கு மலரிட்டு நீராட்டுவதும் கைத்திருத்தொண்டு செய்வதும் சரியை எனப்படும். பெரிய புராணத்தில் இவ்வகை சரியை வழிபாட்டை,

> நல்ல நந்தன வனப்பணி செய்பவர் நறுந்துணர் மலர்க்கொய்வோர்
> பல்ம லர்த்தொடை புனைபவர் கொணர்திரு மஞ்சனப் பணிக்குள்ளோர்
> அல்லு நண்ப லுந்திரு வலக்கிட்டுத் திருமெழுக் கமைப்போர்கள்
> எல்லை யில்விளக் கெரிப்பவர் திருமுறை யெழுதுவோர் வாசிப்போர்
> (தி.தொ.பு. 3925)

(**விளக்கம்:** (இ-ள்) வெளிப்படை; நல்ல திருநந்தனவனத்தின் பணி செய்வோரும், நறிய துணர்களில் பூத்த மலர்களைக் கொய்வோர்களும், பலவகைப்பட்ட மலர் மாலைகளைப் புனைபவர்களும், சென்று திருமஞ்சன நீரினைக் கொணரும் பணிக்கு உள்ளவர்களும், இரவும் பகலுமாகத் திருவலகும் திருமெழுக்கும் அமைப்போர்களும், அளவு படாத திருவிளக்கு எரிப்பவர்களும், திருமுறைகளை எழுதுவோர்களும், அவற்றை வாசிப்பவர்களும்.
(வி-ரை) நல்ல...பணி செய்பவர் - நல்ல - நன்மையாவது இறைவரை அலங்கரிக்க வாய்த்த புனிதமாகிய செடி மரம் கொடிகளை வளர்த்தலும் காத்தலும் சிவன்பணிக்குப் பயன்படுத்தலும் ஆகிய இவை தீமை கலவாத, கருணையே உருவுடைய, பணி என்னும் தன்மை; செய்பவர் - நிலம் பண்படுத்தல், விதை - நாற்று முதலியவை நடுதல், நீர்பாய்ச்சுதல். களை கட்டல் முதலாயினவை செய்தல் எனப்பட்டன. பின்னர், அவ்வப்பணிகளின் தொழில்வகைக் கேற்றபடி மலர் கொய்வோர் - தொடைபுனைபவர் - மஞ்சனப் பணிக்கு உள்ளோர் - அமைப்போர்கள் - எழுதுவோர் - வாசிப்போர் என்பது காண்க.)

எனும் பாடல்வழி விளக்குகிறார் சேக்கிழார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


நந்தவனம் அமைத்து, மலர்கள் பறித்து, மாலை கட்டி, இறைவனின் திருமேனியை நீராட்டி, திருமெழுக்கிட்டு, விளக்கேற்றும் சரியை தொண்டை இப்பாடல் சுட்டுகிறது. மேலும், திருமுறை தொடர்பான விருப்பம் உள்ளவர்களைப் பயிற்றுவிப்பதும் சரியை தொண்டே ஆகும். திருநாவுக்கரசர், குங்கிலியக் கலய நாயனார், அரிவாட்டாய நாயனார், மூர்த்தி நாயனார், முருக நாயனார், உருத்திரப் பசுபதி நாயனார், நமிநந்தியடிகள் ஆகியோரும் சரியை வழிபாட்டையே கடைப்பிடித்தனர் என்பதும் பெரிய புராணத்தின்வழி புலனாகிறது (இராசமாணிக்கனார், 1996).

திருக்கோயிலைக் கூட்டிக் கழுவுதல், மெழுகுதல், கோலமிடல், தீவர்த்தி ஏந்துதல், பல்லக்குச் சுமத்தல், மலர் பறித்துக் கொடுத்தல், திருமஞ்சனத்துக்குப் பால், நீர் கொண்டு வந்து கொடுத்தல், குளம் வெட்டுதல் போன்றவை திருக்கோயில் தொண்டுகளைக் குறிக்கும் (தர்மலிங்கம், 2012). 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' எனும் அடிப்படையில் உலக உயிர்களுக்கு உணவு, உடை, உறையுள் கொடுத்துத் தொண்டு செய்வதும் சரியை மார்க்கம்தான் (தர்மலிங்கம், 2012). எனவே, இயன்ற வழியில் சிறு சிறு உதவிகளை இறைவனுக்கும் அவன் அடியார்களுக்கும் செய்வதும் சரியை எனப்படுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.9.9 தொண்டு

பிற உயிர்களுக்குப் பயன்படும் வகையில் உலக வாழ்க்கையை அமைத்துக் கொள்வதே தொண்டு எனப்படும். தன்னலம் கருதாமல் ஒருவர் மற்றவருக்குச் செய்யும் செயலையும் உதவி புரிதலையும் இது குறிக்கும். திருத்தொண்டு என்பது இறைவனிடத்தில் அடிமைத்திறம் கொண்டு அன்பு நெறியில் இறைவனுக்கும் இறை அடியார்கட்கும் செய்யும் தொண்டைக் குறிக்கும். இறையுணர்வே தொண்டுக்கு அடிப்படை என்பதைச் சேக்கிழார் அறிவுறுத்துகிறார்.

தொண்டு எனும் சொல் மிகப் பழைமையானது. இஃது அடிமைத்தனம் எனும் பொருளுடையது. மேலும், பணி செய்தல், இறை வழிபாடு, ஊழியம் போன்று பிறப் பொருள்களையும் தாங்கி நிற்கிறது (நடராசன், 1993). அன்பு காட்டுவதற்குத் தொண்டு முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அதனாலேயே, தொண்டு நெறி அன்பு நெறியென்று போற்றப்படுகிறது. எனவே, உயிர்களின் துன்பத்தைப் போக்கி இன்பமுறச் செய்யும் உதவிகளே தொண்டு என்பது இங்கு நோக்கத்தக்கது .

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.10 அரசு சாரா இயக்கம்

அரசு சாரா இயக்கங்கள் பன்முகத்தன்மை வாய்ந்தவையாக அமைகின்றன. மனித நேயத்தின் அடிப்படையில் தன்னலம் கருதாச் சேவையாற்றும் ஒருமித்த மனமுடைய மக்களின் அமைப்பே அரசு சாரா இயக்கங்கள் என உலக வங்கி (1990) கூறுகின்றது. அரசு சாரா இயக்கங்கள் கூட்டுறவு அடிப்படையில் செயல்படுபவையே அன்றி எவ்வித வணிக நோக்கத்திற்காகவும் இயங்குவதில்லை என்பதையும் அது (1990)

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


குறிப்பிடுகின்றது. வல்லரசு நாடுகளில் இயங்கி வரும் உலகளாவிய மேம்பாட்டிற்குத் துணைபுரியும் தனியார் அமைப்புகளே அரசு சாரா இயக்கங்கள் எனவும் உலக வங்கி மேற்கோள் காட்டியுள்ளது.

அரசு சாரா இயக்கங்கள் தற்போது எல்லா நாடுகளிலும் இயங்கி வருகின்றன. இவை உள்நாட்டில் வட்டார, மாநில, தேசிய அளவிலும் செயலாற்றுகின்றன. சமுதாய மேம்பாட்டிற்காகத் தனியார் நிதியை உணவு, குடும்பக் கட்டுப்பாடு தொடர்பான சேவைகளுக்கு வழங்குவதில் அரசு சாரா இயக்கங்கள் பெரும் பங்காற்றுகின்றன. மேலும், தொண்டு எனும் குறிக்கோளுடன் செயல்படும் இவை சமயம், சமுதாயம் சார்ந்த இயக்கங்களாகவும் திகழ்கின்றன எனப் பாங்கோக்கில் நடைபெற்ற ஆசியான் தொழில்நுட்ப நிறுவனங்களின் பணிமனையில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது (1988). அரசு சாரா இயக்கங்கள் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் முக்கியப்
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
பங்கு வகிக்கின்றன என்று அந்த ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது (1988). எனவே, இன்றைய காலக்கட்டத்தில் மக்களுக்குப் பலவகையிலும் சேவையாற்றும் அமைப்புகளே அரசு சாரா இயக்கங்கள் என்பது கருத்தில் கொள்ளத்தக்கது.

### 1.9.11 அரசு சாரா இந்தியர் இயக்கம்

நாடு முழுவதும் இயங்கி வரும் அரசு சாரா இயக்கங்கள் இன்றளவில் ஒரு கூட்டணியாகச் செயல்பட்டு வருகின்றது. இவ்வியக்கங்கள் தனிமனிதன், குடும்பம் எனத் தங்கள் சக்திக்கு ஏற்றவாறு பல தொண்டுகளை ஆற்றி வருகின்றன. இருப்பினும், இவ்வியக்கங்களின் குறிக்கோளும் செயல்திட்டங்களும் மக்களின் நலன் கருதியே அமைவதாக நோர்மா மன்சூர் தெரிவிக்கிறார் (Normah Mansor, 2014).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இதில் அரசு சாரா இந்தியர் இயக்கங்களும் விதிவிலக்கல்ல. மலேசியாவில் செயல்பட்டு வரும் மலேசிய இந்து சங்கம், மலேசிய இந்து இளைஞர் இயக்கம் போன்றவை இந்தியச் சமுதாயத்திற்குப் பல சேவைகளை வழங்கி வருகின்றன (மலேசிய அமைப்புகள் பதிவு இலாகா, 2017). குறிப்பாக இவற்றின் நடவடிக்கைகள் இந்துக்களுக்குச் செய்யும் சேவைகளாக அமைகின்றன. இவ்வியக்கங்களின் சேவைகள் இந்து சமயச் சுவடுகளைப் பின்பற்றி சமயக் கல்வியைப் போதிக்கவும் இந்துக்களின் வாழ்க்கை தரத்தைக் கல்வியிலும் வணிகத்திலும் உயர்த்திக் காட்டவும் வழிவகுக்கின்றது (மலேசிய இந்து இளைஞர் இயக்கம், 2018). அதன் அடிப்படையிலேயே இவ்வாய்வுக்குட்படுத்தப்பட்ட மலேசிய இந்து சங்கம் போர்ட்டிக்சன் வட்டாரப் பேரவை, போர்ட்டிக்சன் சமூக மேம்பாட்டுக் கழகம், போர்ட்டிக்சன் புத்தாக்கக் குடும்ப நலனபிவிருத்திக் கழகம் ஆகியன மூன்றும் போர்ட்டிக்க்சன் வாழ் இந்து பெருமக்களுக்குச் செய்யப்படும் சமயம், சமுதாயம் சார்ந்த உதவிகளை மையமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.10 தொகுப்புரை

இவ்வியல் ஆய்வுப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வின் நோக்கம், ஆய்வு வினா, ஆய்வுக் கருத்துக் கட்டமைப்பு, ஆய்வுக் கோட்பாடு கட்டமைப்பு, ஆய்வின் முக்கியத்துவம், ஆய்வு எல்லை, கருச்சொற்கள் விளக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. இவ்வியலின் ஆய்வுப் பின்னணி பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சரியை தொண்டுகளின் அடிப்படையில் தற்கால அரசு சாரா இயக்கங்களின் சேவைகளைப் பற்றி விவரித்துள்ளது.

தவிர, ஆய்வுச் சிக்கல் இன்றைய நிலையில் தொண்டுகளைப் பின்னொற்றியே அமைந்துள்ளது. அதன் அடிப்படையில் நான்கு ஆய்வு நோக்கங்களும் வினாக்களும் இதில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வின் முக்கியத்துவம் எல்லா

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சாரர்களுக்கும் தொண்டின் மாண்பை எடுத்தியம்பும் வகையில் வரையறுக்கப்பட்டுள்ளது. இறுதியாக, இவ்வியலில் ஆய்வு தொடர்பான 10 கருச்சொற்களையொட்டிய விளக்கங்களும் இடம்பெற்றுள்ளன. எனவே, இவ்வியல் ஆய்வின் ஒட்டுமொத்தக் கண்ணோட்டத்தை வழங்கியுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi